01.02.2023
அ.வ.எண்.2/2019

மைக்கேல் (P.W.1)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து எனது தகப்பனார் செண்பகம் மற்றும் அவரது பிள்ளைகளுக்கு எதிராக 2-ஆம் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்து மாண்புமிகு உயர்நீதிமன்ற கிளையில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கு எனது தகப்பனார் சொத்தில் உள்ள வழிப்பாதையை விரிவாக்கம் செய்யக்கூடாது என்று தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு பற்றி இந்த வழக்கில் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் உள்ள விவரங்களை வேண்டும் என்றே கூறாமல் இவ்வழக்கில் மறைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் நகராட்சி தண்ணீர் இணைப்பு செல்கிறது என்றால் சரிதான். மேற்படி தண்ணீர் இணைப்பு 4-ஆம் பிரதிவாதி வசித்து வரும் வீட்டிற்கு செல்லக்கூடிய என்று சொன்னால் சரியல்ல பொதுவாக எனது தாயார் பெயரில் தண்ணீர் இணைப்பு பெறப்பட்டது- மேற்படி தண்ணீர் இணைப்பை நானும் 6-ஆம் பிரதிவாதியும் சேர்ந்து சேதப்படுத்தி கழிவுகளை போட்டோம் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக 4-ஆம் பிரதிவாதியின் மனைவி தக்கலை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல நாங்கள் வீட்டில் தாமசிக்ககூடாது என்று கொடுத்தார். அவர் தண்ணீர் இணைப்பை சேதப்படுத்தியதற்காக தான் புகார் கொடுத்தார் என்றாலும் ஆனால் நாங்கள் வீட்டில் வசிக்ககூடாது என்று பொய்யாக கூறி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

2.. கதவு எண்.5/65-1 -ற்கான வீட்டுவரி ரசீது, தண்ணீர் வரி ரசீது, மின்சார கட்டண ரசீது மேற்படி அனைத்தையும் 4-ஆம் பிரதிவாதி தான் செலுத்தி அவரது கைவசம் வைத்துள்ளார் என்றால் இருக்கலாம். 4-ஆம் பிரதிவாதி சிறு வயது முதலே உழைத்து 2 மற்றும் 5-ஆம் பிரதிவாதிகளின் திருமணச் செலவுகளையும் மற்றும் எனது அப்பாவிற்கு மருத்துவசெலவுகளையும் செய்து வந்ததால் எனது அம்மா அவருக்கு உரிமைப்பட்ட வழக்கு சொத்தில் உள்ள உரிமையை 4-ஆம் பிரதிவாதிக்கு 22.12.2019 -ஆம் தேதியிட்ட சம்மத பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. 4-ஆம் பிரதிவாதி எனது அம்மாவை நல்ல முறையில் கவனித்து வருவதால் தக்கலை

சார்பதிவாளர் அலுவலகத்தில் 4-ஆம் பிரதிவாதி பெயரில் கூட்டு அவகாச விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. 2 மற்றும் 5-ஆம் பிரதிவாதிகளின் திருமணத்தின் போது அதிகபடியான சீர்வரிசை கொடுக்கப்பட்டதால் அவர்கள் வழக்கு சொத்தில் எவ்வித பாகமும் பெற அறுகதையுடையவர் என்றால் சரியல்ல.

3. கதவு எண்.5/65-1 வீட்டில் 4-ஆம் பிரதிவாதி, 1-ஆம் பிரதிவாதி குடும்பத்துடன் வசித்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் பிராதில் கூறியுள்ள 24.12.2018 அன்று நான் வழக்கு சொத்தில் பிரதிவாதிகளளிடம் பாகம் கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதைபோன்று 2-ஆம் பிரதிவாதி வழக்கு சொத்தை விற்பனை செய்வதற்கு முயற்சி செய்கிறார் என்றும் மேலும் அது சம்மந்தமாக என்னை மிரட்டினார் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 1-ஆம் பிரதிவாதிக்கு 6/18 பாகமும் 4-ஆம் பிரதிவாதியின் பாகமும் சேர்த்து 8/18 பாகமும் 4-ஆம் பிரதிவாதிக்கு கூட்டாக கிடைக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல. 1-ஆம் பிரதிவாதி வழக்கு சொத்தில் உள்ள அனைத்து உரிமைகளையும் 4-ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்து விட்டதால் அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 4-ஆம் பிரதிவாதி 8/18 பாகத்திற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த தயாராக உள்ளதாகவும் அவருக்கு 8/18 பாகமும் தனித்து கிடைக்கதக்கது என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை குறைத்து மதிப்பீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமான சொத்து வரி ரசீதுகளை தாக்கல் செய்யலாம். இந்த வழக்கை தாக்கல் செய்ய எவ்வித மூலகாரணமும் இல்லை என்றால் சரியல்ல. ஆகையால் வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றாலும் பொய்யாக சாட்சியம் அளித்திருப்பதாலும் இவ்வழக்கு 4-ஆம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.